செ.வெ.எண்: 34/2021 நாள்: 23.11.2021

# திருப்பூர், மாவட்ட நிர்வாகம், திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தாராபுரம், மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 30.11.2021 செவ்வாய்கிழமை அன்று காலை 9.00 மணிமுதல் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

# இந்த அறியவாய்ப்பினை வேலை நாடுநர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!

திருப்பூர், மாவட்ட நிர்வாகம், திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து நடத்தும் **மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்** தாராபுரம், மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 30.11.2021 செவ்வாய்கிழமை அன்று காலை 9.00 மணிமுதல் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட முன்னனி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 8ம் வகுப்பு தேர்ச்சி முதல் +2 தேர்ச்சி, பட்டதாரிகள், பட்டயப்படிப்பு படித்தவர்கள், ஐடிஐ, தொழில் கல்வி பெற்றவர்கள், செவிலியர்கள், பொறியியல் பட்டம், கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள், தையல் கற்றவர்கள் என அனைத்து வித தகுதியாளர்களும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். வேலை அளிக்கும் நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொள்ள **www.tnprivatejobs.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் பதிவு செய்வது அவசியமாகும். வேலைநாடுநர்கள் இவ்விணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பதிவு, மாவட்ட தொழில் மையத்தின் தொழில்முனைவோர்களுக்கான ஆலோசனைகள், மகளிர் திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்புகளுக்கான பதிவுகள், மாவட்ட முன்னோடி வங்கியின் வாயிலாக வங்கி கடன் குறித்த வழிகாட்டுதல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை 0421-2999152 அல்லது 94990 55944 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வேலைநாடுநர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்று பணிவாய்ப்பினை பெற்று பயனடையுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்..வினித், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**